


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | பிப்ரவரி 20, 2020 | புரட்சி 19 | முழக்கம் 06 | விலை: ரூ.3.00


## கொளத்தூர் மணி அடுக்கடுக்கான கேள்விகள்

# ‘துக்ளக்’ சோ நேர்மையானவரா?

***ரஜினிகாந்த் சான்றிதழ் வழங்குவதுபோல் சோ நேர்மையானவர்தானா என்ற கேள்வியை எழுப்பி, அவரது முகத்திரையைக் கிழித்துக் காட்டினார் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.***

*‘சேலத்தில் நடந்தது என்ன?’ எனும் தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமையகத்தில் நடந்த நிகழ்வில் தலைமையேற்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை:*

அய்ம்பது ஆண்டுகளுக்கு முன் 1971ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டைப் பற்றி நாம் பேச வேண்டிய தேவை தற்போது எழுந்திருக்கிறது. பெரியார் இயக்கத்திற்கு எதிரிகள் தான் எப்போதும் விளம்பரம் கொடுத்து வந்துள்ளார்கள். அதே போல் தற்போதும்கூட சேலம் மாநாட்டில் என்ன நடந்தது என்று பலருக்கும் தெரியாது. 1971ற்குப் பிறகு பிறந்தவர்கள் தான் இங்கு ஏராளமானவர்கள் வந்திருக்கிறார்கள். 1971இல் அந்த மாநாட்டில் தான் நான் முதன் முதலில் கலந்து கொள்கிறேன். பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டது உண்டு. ஆனால் மாநாடு என்று பார்த்தால் அந்த மாநாடு தான் முதல் மாநாடு. அப்போது இயக்கம் எடுத்த நடவடிக்கைகளையெல்லாம் தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார்கள். 1971ஆம் ஆண்டு நடந்த நிகழ்வை கடந்த ஜனவரி 14ஆம் தேதி ‘துக்ளக்’ விழாவில் ரஜினி பேசியதால் தான் தற்போது அதைப் பற்றி பேச வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. சோ வை புகழ்வதற்காக ரஜினி பேசினார் என்பது உண்மை. சோ வை புகழ வேண்டும் அதற்காக எதை வேண்டுமானாலும் பேசலாமா? அதற்காக ரஜினி கூறுகிறார் அந்த சேலம் மாநாட்டில் நடந்ததை ஒரே ஒருவர் தான் துணிச்சலாக எழுதுகிறார் என்பதைப்போலத் தான் அவர் பேசுகிறார். ஆனால் அப்போது ஆங்கில இந்து பத்திரிக்கை, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஆகிய பத்திரிக்கைகளில் சேலம் மாநாட்டைப் பற்றி எழுதியிருந்தார்கள். அதையெல்லாம் அவர் கண்டுகொள்ளவில்லை. சோ வை புகழ வேண்டும் அதனால் அப்படி பேசியிருக்கிறார்.

சோ என்ன அவ்வளவு புகழத்தக்க அரசியல் வாதியா? விமர்சகரா? என்றால் அதுவும் கிடையாது. சில வாய்ப்புகளில் அதைப் பற்றி கூறியிருக்கிறேன். ‘துக்ளக்’ ஆரம்பித்த பின் ஊழலைப் பற்றி ஒரு கேள்வி கேட்டார் வாசகர். ஊழலைப் பற்றி கடைசி வரை விமர்சித்துக் கொண்டுதான் இருந்தார். முந்த்ரா ஊழல் குற்றச்சாட்டில் நேரு அமைச்சரவையில் அமைச்சராக இருந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரி அமைச்சரவையில் இருந்து நீக்கப்படுகிறார். அதைப்பற்றி எழுதும்போது, அந்த கேள்விக்கு நீங்கள் பதில் கூறவில்லை ஏனெனில் டி.டி.கே நிறுவனத்தில் நீங்கள் பணி புரிவதனாலா? என்ற கேள்வியை ஒருவர் துக்ளக்கில் கேட்டிருந்தார். அதற்கு சோ ஆம் என்று பதில் அளித்திருந்தார். எனவே எனக்கு சம்பளம் கொடுத்து, வேலை கொடுப்பவர்களின் ஊழலைப் பற்றி பேசமாட்டேன். ஆனால் மற்றவர்களின் ஊழலைப் பற்றி பேசுவேன் என்பதைத்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்படி நேர்மையற்றவர் தான் அவர். அடுத்து சங்கராச்சாரியாரைப் பற்றி ஒரு கேள்வி வந்தது.

காஞ்சி சங்கராச்சாரியாக இருந்த ஜெயேந்திரன், மடத்திலேயே துறவிகளுக்கு அடையாளமாக எப்போதும் கையில் வைத்திருக்கும் ‘தண்டத்தை’ மடத்திலேயே விட்டுவிட்டு, ஒரு பெண்ணுடன் மடத்திலிருந்து இரகசியமாக ஓடிப் போனார். அப்போது சங்கராச்சாரியின் இந்த நடத்தைக் குறித்து சோவிடம் கேட்டபோது, காஞ்சி மடம் நான், மிகவும் மதிக்கும் மடம். அது குறித்து நான் எதுவும் பேச மாட்டேன் என்று பதில் கூறினார். ஜெயேந்திரன் மடத்தை விட்டு ஓடிய நிலையில் மூத்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதி, விஜேந்திரனை மூன்றாம் நிலை சங்கராச்சாரியாக அறிவித்தார். இந்து அறநிலையத்துறையும் சட்டப்பூர்வமாக அதை அங்கீகரித்தது. பிறகு சமாதானமடைந்து ஓடிப்போன ஜெயேந்திரன் மீண்டும் காஞ்சி மடத்துக்கு திரும்பினார். தண்டத்தை விட்டு ஓடிப் போனாலே துறவு நிலையை துறந்து விட்டதாகக் கூறுவதும் அவர்கள்தான். அப்படிப்பட்டவர் எப்படி மீண்டும் திரும்பி வந்து தன்னை சங்கராச்சாரியாக தன்னைத் தானே அறிவித்துக் கொண்டார்? இது மடத்தின் சாஸ்திர, சம்பிரதாயங்களுக்கு மட்டுமல்ல சட்டத்துக்கும் எதிரான செயல்பாடு ஆயிற்றே என்று எந்த பார்ப்பனரும் கேட்கவில்லை.



‘துக்ளக்’ சோவோ, நான் மிகவும் மதிக்கும் மடத்தைப் பேச மாட்டேன் என்றார். இவர்கள் தமிழில் குடமுழுக்கு செய்ய வேண்டு மானால், அது ஆகமத்துக்கு பழக்க வழக்கத்துக்கு எதிரானது என்று கூச்சல் போடுகிறார்கள்.

பார்ப்பனர்கள் தங்களுக்கு சாதகமாக இருந்தால் எதுவும் சொல்ல மாட்டார்கள் பாதகமாக இருந்தால் மட்டும் தான் கூறுவார்கள். கடல் தாண்டி சென்றார்கள் என்பதற்காக எத்தனையோ பேரை விலக்கியிருக்கிறார்கள். ஆனால் தற்போது அமெரிக்காவில் இருப்பவர்கள் அனைவரும் பார்ப்பனர்கள் தான். கோவில் கட்டுகிறார்கள் வெளி நாடுகளில் கோவிலில் அர்ச்சனை செய்வதற்கு இங்கிருந்து பார்ப்பனர்கள் செல்கிறார்கள். அவர்கள்

(2ஆம் பக்கம்)

## சோ ஊழல் எதிர்ப்பாளரா?

- *மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஜெயில்சிங், இந்தியாவின் குடியரசுத் தலைவரானபோது காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருந்தால் போதும் தகுதி வேண்டாம் என்று இரண்டு கழுதைகள் பேசுவதுபோல ‘துக்ளக்’கில் அட்டைப்பட கார்ட்டூன் போட்டார் சோ. பிறகு, காங்கிரஸ் கட்சியிலிருந்து மத்திய அமைச்சர் பதவி வகித்து, அவசர நிலை காலத்துக்குப் பிறகு காங்கிரஸ் தோல்வி அடைந்த நிலையில் காங்கிரசிலிருந்து விலகி, இராஜாஜியின் சுதந்திரா கட்சி ஆதரவாளராக அவர் நடத்திய ‘சுயராஜ்யா’ பத்திரிகையிலும் ஆசிரியராகி, பச்சை சந்தர்ப்பவாதியாக செயல்பட்ட ஆர். வெங்கட்ராமன் குடியரசுத் தலைவரானபோது, ‘துக்ளக்’ கழுதைப் படம் போடவில்லை. ஆர்.வி.க்கு பார்ப்பனர் என்பதைவிட வேறு என்ன தகுதி என்று ‘துக்ளக்’ விழாவில் கேட்டபோது, யாரை கழுதையாகப் போட வேண்டும் என்பது எனது உரிமை என்று பதில் கூறினார் சோ.*
- *காமராசர் நேர்மையானவர் என்று பேசி வந்த இதே சோ, காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தன்னுடைய நாடகத்துக்கு பார்வையாளராக காமராசரை அழைத்து, அதே நாடகத்தில் காங்கிரசையும் காமராசரையும் படு கேவலமாகக் கிண்டல் செய்தார். ஆத்திரமடைந்த காமராசர், பாதியிலேயே நாடகத்தை விட்டு வெளியேறினார். இத்தகைய பண்பாளர் ‘சோ’!*
- *‘அவசர நிலை’யை எதிர்த்தவர் சோ என்று கூறுகிறார்கள். அவரது ‘துக்ளக்’ அட்டை கறுப்பு வண்ணத்தில் அச்சிடப்பட்டு அவசர நிலையை எதிர்த்தது. அவசர நிலை காலத்தில் கடும் ஒடுக்குமுறையை சந்தித்தது தி.மு.க. இந்திரா ஆட்சியை வீழ்த்தி, நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க காமராசரின் ஸ்தாபன காங்கிரசும் தி.மு.க.வும் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தன. அப்போது கடற்கரையில் கூட்டம் போட்டுப் பேசிய சோ, ஸ்தாபன காங்கிரஸ் வேட்பாளர்களை மட்டுமே ஆதரியுங்கள்; அவர்கள் போட்டியிடாத இடங்களில் யாருக்கு வேண்டுமானாலும் ஓட்டுப் போடுங்கள்; நான் தி.முக.வை ஆதரிக்க மாட்டேன் என்றார். இந்திராவின் அவசர நிலை எதிர்ப்பைவிட தி.மு.க. எதிர்ப்பே தான் சோவுக்கு முக்கியமாக இருந்தது. இதுவே அவரது அவசர நிலை எதிர்ப்பின் யோக்கியதை.*
- *எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் எரி சாராய ஊழல் பரபரப்பாகப் பேசப்பட்டது. இராமசாமி உடையார் என்பவருக்கு சாராய விற்பனை உரிமை வழங்கப்பட்டது. சென்னை மாவட்டத்தில் சாராயக் கடைகளை முழுமையாக அந்த ‘உடையாரே’ நடத்தினார். ஒரு கட்டத்தில் அவர் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகைக் கூட தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வளவு பெரிய ஊழலுக்கு சொந்தக்காரர் நடத்திய அறக் கட்டளைக்கு தலைவராக இருந்தது, சோ-வின் தந்தை. அவர் இறந்தபோது உடையாளர் அறக்கட்டளை வெளியிட்ட விளம்பரங்களில் தான் சோவின் தந்தை படத்தை வெளியிட்டு அறக்கட்டளையின் தலைவர் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டது. இதை எல்லாம் மறைத்து எம்.ஜி.ஆர். ஆட்சியை ‘சோ’ தீவிரமாக ஆதரித்தார்.*
- *1983ஆம் ஆண்டில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளராக இருந்த கி.வீரமணி அவர்களை ‘துக்ளக்’ இதழுக்காக பெரியார் திடலுக்கு பேட்டி எடுக்க வந்தார். பெரியார் அருங்காட்சியகத்தில் பேட்டி எடுத்த ‘துக்ளக்’ சோ, தனது ‘சிகரெட் பைப்பை’ப் பற்ற வைத்துக் கொண்டே பேசினார். ஆசிரியர் வீரமணி, தனக்கு சிகரெட் புகையில் ஒவ்வாமை இருப்பதை சுட்டிக் காட்டிய பிறகு புகைப்பதை நிறுத் தினார். விடைபெற்றுத் திரும்பும்போது, ‘நான் எப்போதும் பிராமணன்தான்’ என்று கூறி சட்டையைக் கழற்றி பூணூலைப் பிடித்துக் காட்டினார். நாகரிகமற்ற ஆணவம் – கொழுப்புடன் நடந்து கொண்ட ‘துக்ளக்’ சோ, உண்மையில் அப்படி முதுகெலும்பு உள்ள மனிதர் தானா என்பது பிறகு தெரிய வந்தது.*
- *திராவிட இயக்க எழுத்தாளரான சின்ன குத்தூசி, முற்போக்கு சிந்தனையுள்ள ஞாநி, இருவரும் சங்கராச்சாரி அழைப்பை ஏற்று அவருடன் விவாதிக்க காஞ்சிபுரம் போனார்கள். அப்போது, ‘வீரமணியிடம் பேட்டி எடுக்க நான் தான் சோ. ராமசாமியை அனுப்பினேன். அவனுக்கு கேள்விகளையும் நான்தான் தயாரித்தேன்’ என்று கூறினார். இதை ‘எதிரொலி’ நாளேட்டில் (3.4.1983) சின்னக் குத்தூசி பதிவு செய்தார். பதறிப் போன சோ, “சுவாமிகள் அப்படியா சொன்னார்?” என்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டார். சங்கராச்சாரி கூறியது தவறு என்றால், உங்கள் ஏட்டில் மறுப்பு வெளியிடுங்கள் என்று சின்னக் குத்தூசி கூறினார். ‘ஜெயேந்திரர் கூறியது பொய்’ என்று மறுத்தார் சோ. ஆனால், ‘அந்த மடத்தின் மீது எனக்கு மிகவும் மதிப்பு இருப்பதால், மறுத்து எழுதப் போவது இல்லை’ என்று பதில் கூறி விட்டார். மாறாக ‘துக்ளக்’கில் ஞாநியும், சின்னக்குத்தூசியும் சங்கராச்சாரி கூறாத ஒன்றை எழுதி விட்டதாக விளக்கம் தந்தார். இதைக் கண்டித்து சின்னக் குத்தூசி, ‘துக்ளக்’ சோவுக்கு நேரடியாகவே கண்டனக் கடிதம் எழுதி அதை ‘எதிரொலி’யிலும் பதிவு செய்தார் (15.4.193).*
- *எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் சவுந்தபாண்டியன் என்ற ஒரு அமைச்சர் இருந்தார். அவர் எம்.ஜி.ஆரிடம் கருத்து வேறுபாடு கொண்டு பதவி விலகியபோது, அவரைக் கண்காணிக்கும் உளவு வேலையை ‘துக்ளக்’ சோவிடம் ஒப்படைத்திருந்தார், எம்.ஜி.ஆர். பதவி விலகிய சவுந்திரபாண்டியன், ‘துக்ளக்’ சோ நான் போகிற இடங்களுக்கெல்லாம் ஆட்களை வைத்து என்னை உளவு பார்க்கிறார் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். குட்டு உடைந்தவுடன், சோ, ‘துக்ளக்’ ஏட்டின் முதல் பக்கத்திலேயே நான் அப்படி உளவு வேலை பார்த்தது உண்மை என்று ஒப்புக் கொண்டார். “ஒரு பெரிய மனிதருக்காக நல்லவருக்காக நான் அந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டியதாயிற்று” என்று எழுதினார். இதை சோவுக்கு எழுதிய அதே கடிதத்தில் ஞாநியும் பதிவு செய்துள்ளார்.*

*சோவின் பார்ப்பன நேர்மை குறித்து ஏராளமாக பட்டியலிடலாம். உதாரணத்துக்கு சிலவற்றை மட்டும் குறிப்பிட்டோம்.*

– இரா

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 20.02.2020**

# எதிர்த்த ஊர் மக்களே மேளதாளத்துடன் வரவேற்பு

## தலித் மக்கள் உரிமைக்காக வாதாடி வென்ற வழக்கறிஞர் ப.பா. மோகனுக்கு பாராட்டு

ஈரோடு மாவட்டம், சென்னிமலை அருகே உள்ள வடுகபாளையத்தில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, ஊர்ப் பொதுமக்கள் சுடுகாடு கேட்டு போராடி, இறந்த உள்ளூர்க்காரரின் உடலை நடுரோட்டில் வைத்து சாலை மறியல் செய்த காரணத்தால், 43 பேர் கைது செய்யப்பட்டு சிறைப் படுத்தப்பட்டனர். இதில் திராவிடர் விடுதலைக் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி, விடுதலை வேங்கைகள், தற்சார்பு விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட இயக்கங்கள் களப்பணி ஆற்றி, மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் மூலமாக, கடந்த 6 ஆண்டுகளாக பெருந்துறை நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த 43 பேரும் கடந்த 27.12.2019 அன்று பெருந்துறை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில், எவ்வித கட்டணமும் வாங்காமல் வாதாடி விடுதலை பெற்றுத்தந்த மூத்த வழக்கறிஞர் ப.பா மோகன் மற்றும் இந்தப் பிரச்சனையில் உதவிக்கரம் நீட்டிய அமைப்புகளுக்கும், அமைப்பின் பொறுப்பாளர்களுக்கும் பாராட்டு விழா 25.01.2020 சனிக்கிழமை மாலை வடுகபாளையத்தில் நடைபெற்றது .நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த வழக்கறிஞர் ப.பா. மோகன் மற்றும் .கொளத்தூர் மணி ஆகியோரை ஊர் பொதுமக்கள் நூற்றுக்கணக்கானோர் திரண்டு நின்று, ஊர் எல்லையில் வானவேடிக்கைகள், மேளதாளங்கள் முழங்க வரவேற்பு அளித்தனர். ஊர் எல்லையில் இருந்து விழா நடக்கும் இடம் வரை, வாழ்த்துகள், பாராட்டுகள், நன்றிகள் கோசங்கள் முழங்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர் .

விழா நடத்துவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே ஊர்மக்கள் சார்பாக காவல் துறையிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதை வாங்காமல் இறுதிவரை தட்டிக்கழித்த காவல்துறையினர் நிகழ்விற்கு முந்தைய நாள் விழாவிற்கு என மேடை அமைக்கக் கூடாது; ஒலிபெருக்கி வைக்கக் கூடாது; மீறி நடந்தால் மீண்டும் வழக்கு போட்டு கைது செய்வோம் என்று மிரட்டினர்.

இந்நிலையில் விழா நடந்த அன்று மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் காவல்துறை ஆய்வாளரிடமும், காவல்துறை துணைக் கண்காணிப்பாளரிடமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போது, அவர்களும் அனுமதி அளிக்க மறுத்தனர். பிறகு, மேடை இன்றி, ஒலிபெருக்கி இன்றி விழா நடத்தப்பட்டது. முன்னாள் வார்டு உறுப்பினர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். சிறைச் சென்ற பிரபாகரன் வரவேற்புரை ஆற்றினார் .

இந்த ஊரை சார்ந்த ஆசிரியர் சிவக்குமார் வரவேற்றுப் பேசினார். தனது உரையில், மக்கள் பெரியாரை கடவுள் மறுப்பாளராக மட்டும் பார்க்க கூடாது என்றும், தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தந்தை பெரியார் ஆற்றிய பணிகள் குறித்தும், கடந்த 6 ஆண்டுகளாக இந்த வழக்கு கடந்து வந்த பாதை குறித்தும், இந்த வழக்கின் வெற்றியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பங்கு குறித்தும் விவரித்து பேசினார். அமைப்பு செயலாளர் இரத்தினசாமி இந்த வழக்கு பற்றி உரையாற்றினார்.. புரட்சிகர இளைஞர் முன்னணியை சேர்ந்த செல்வராஜ், தற்சார்பு விவசாயிகள் சங்கத்தை சார்ந்த கி.வே.பொன்னையன், விடுதலை வேங்கைகள் கட்சியைச் சார்ந்த தமிழின்பன் ஆகியோர் உரையாற்றினர்.

விழாவில் ப.பா. மோகன் மற்றும் அவரது ஜூனியர் வழக்கறிஞர் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு பயனாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது.

வழக்கறிஞர் ப.பா.மோகனுக்கு ஊர்மக்கள் சார்பில், முக்கால் பவுன் தங்க மோதிரமும், பாலகிருஷ்ணனுக்கு வெள்ளியிலான பிரேஸ்லெட்டும் ஊர்மக்கள் சார்பாக வழங்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் வழக்கில் உதவிய அமைப்புகளை சார்ந்த தோழர்களுக்கும் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் படம் பொறித்த நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

வழக்கறிஞர் ப.பா.மோகன் தனது ஏற்புரையில், "இந்த வழக்கு தன்னிடம் வந்த விதம் குறித்தும், இந்த வழக்கில் திராவிடர் விடுதலை கழக தோழர்களின் பங்கு குறித்தும் , வழக்கு விசாரணைகள் பற்றிய விபரங்களையும்" எடுத்துரைத்தார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசும்போது, "இன்றைக்கு பார்ப்பனியம் என்பது ஆதிக்க பார்ப்பனர்களிடம் மட்டும் இல்லை.அது அனைவரிடத்திலும் விரவிக் கிடக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக அருந்ததியர் சமூகத்தை சார்ந்த பெண்ணை ஆதிதிராவிடர் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் காதலித்ததால் ஏற்பட்ட கொலையை சுட்டிக்காட்டிப்" பேசினார். இன்றைய சூழ்நிலையில் தந்தை பெரியாரின் தேவைகள் பற்றி மிக விரிவாக எடுத்துரைத்தார். இறுதியாக வழக்கில் சிறைப்பட்டிருந்த தோழர்.சதீஷ் நன்றி கூறினார்..

நிகழ்வில் சுற்று வட்டாரங்களில் இருந்து சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டிருந்தனர். அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு, பெரியார் திராவிடர் கழகமாக நாம் செயல்பட்ட போது, இந்தப் பகுதியில் கூட்டம் நடத்த முனைந்தபோது, ஊர்மக்கள் எதிர்ப்பு தெரிவித்து காவல்துறை வரை சென்றனர்.இருப்பினும் நாம் தோழர்.

கொளத்தூர்மணி சிறப்புரையோடு விழாவினை நடத்தினோம். அன்று எதிர்ப்பு தெரிவித்த அதே ஊர் மக்கள் இன்றைக்கு மேளதாளங்கள் முழங்க வான வேடிக்கைகளோடு நமது தோழர்களை வரவேற்று அழைத்துச் சென்றது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இவ்வூரில் பெரியாரின் கருத்துக்களை பேசக்கூடிய, ஏற்றுக் கொள்ளக்கூடிய இளைஞர்கள் உருவாகி இருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**தனக்கு பரிசாக வழங்கிய மோதிரத்தை கழகத்துக்கு அளித்தார் ப.பா. மோகன்**

இந்த விழாவில் ஒரு சிறப்பு நிகழ்வாக வழக்கறிஞர் ப.பா. மோகன், தனக்கு ஊர் மக்கள் சார்பாக அளிக்கப்பட்ட தங்க மோதிரத்தை, இந்த வழக்கில் நான் கருஞ்சட்டைத் தோழர்களின் வேண்டு கோளுக்காக வாதாடினேன். எனவே, இதுவரை களப்பணியாற்றி பாடுபட்ட திராவிடர் விடுதலை கழகத்திற்கே இந்த மோதிரத்தை வழங்குகிறேன்" என்று கூறி மக்களுடைய கரவொலிக்கிடையில் கழக வளர்ச்சி நிதிக்காக கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் அளித்தார்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் பார்ப்பனர்களாகத்தான் இருக்கிறார்கள் சாஸ்திரத்தை பின்பற்றுபவர்களாகத்தான் இருக் கிறார்கள். பிராமணன் கடல் தாண்டுவது சாஸ்திர விரோதமாயிற்றே என்று ஒன்றும் சொல்வதில்லை.

ஜெயலலிதா முதல்வராக இருக்கும் போதே ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு வேறொருவரிடம் முதல்வர் பதவியை கொடுத்துவிட்டு மீண்டும் வந்து முதல்வராக பதவியில் இருந்தார். ஆனால் சிறைக்குள் முழுமையாக இருக்கும் காலகட்டத்தில் நல்வாய்ப்பாக இறந்து போய்விட்டார். ஆனால் அந்த நேரத்தில் தற்போது தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிற சசிகலா இருக்கிறார். அவர் ஒரு காலத்தில. ஜெயலலிதாவின் வீட்டில் இருந்து வெளியே அனுப்பப்பட்டார். சசிகலா பல நிறுவனங்களில் இயக்குனராக இருந்தார். ஊழல் பணத்தை வைத்துக் கொண்டு பல நிறுவனங்களை நடத்திக் கொண்டிருப்பதாக பத்திரிக்கைகளெல்லாம் எழுதின. சசிகலா வெளியே அனுப்பப்பட்டவுடன் அத்தனை இயக்குனர் பதவிகளிலும் சோ தான் நியமிக்கப்பட்டார். ஊழல் பணத்தில் நிறுவப்பட்ட நிறுவனங்களில் இயக்குனராக 'சோ' தான் இருந்தார். சசிகலா மீண்டும் போயஸ் கார்டனுக்கு திரும்பி வந்தவுடன் சோ - ஜெயலலிதா கூட்டணியை ஏற்று இயக்குனர் பதவிகளிலிருந்து விலகி சசிகலாவுக்கு வழி விட்டார். ஊழல்காரர்களுக்கு மாற்று (substitute) ஆளாக இருந்துள்ளார். வந்தால் சென்றுவிடுகிறேன் என்று ஒரு ஏவல் ஆளைப் போல் செயல்பட்டிருக்கிறார். இவர்தான் நேர்மையைப் பற்றியும் ஊழலைப் பற்றியும் பேசிக் கொண்டுள்ளார்.

சோ அரசியல் சார்பில்லாதவர் என்பதெல்லாம் கிடையாது. பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியவர் அவர். அப்போது பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவாளர் தான் நடுநிலையாளர் என்று அவரை எப்படி கூற முடியும்? இது போன்ற பல செய்திகள் இருந்தாலும், சேலம் மாநாட்டைப் பற்றி கூறிவிட வேண்டும். சேலம் மாநாட்டின் வழக்குகளைப் பற்றி வழக்கறிஞர் துரைசாமி கூறுவார். 'துக்ளக்' படம் வந்தது தான் வழக்கா? இல்லை 'துக்ளக்' அட்டையில் ஒரு படத்தை போட்டார்கள் அதில் பெரியார் செருப்பால் அடிப்பதைப் போலவும், பக்கத்தில் கலைஞர் நின்று கொண்டு சபாஷ் என்று சொல்வதைப் போலவும் ஏதோ கலைஞரே இராமன் படத்தை செருப்பால் அடிக்கத் தூண்டுவதுபோல் இருந்தது அந்த படம். இராமன் படத்தை பெரியார் செருப்பால் அடிக்கவில்லை பெரியார் இயக்கத் தோழர்கள் தான் அடித்தார்கள். சரி பெரியார் அடித்ததாக கூட உருவகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அட்டைப் படமாக இப்படி ஒரு படத்தைப் போடுவது என்பது எந்த விதத்தில் சரி? தற்போது டிவிட்டரில் மோடியைப் பற்றியோ, சட்டங்களைப் பற்றியோ எழுதினால் கைது செய்கிறார்கள். ஆனால் நடக்காத ஒன்றை நடந்ததாக ஒரு மாநிலத்தின் முதலமைச்சரை அப்படி வரைவது சரியா? அதை பறிமுதல் செய்வது குற்றமாகுமா? அந்த வகையில் அது பறிமுதல் செய்யப்பட்டது. சட்டப் பிரிவுகளின் கீழ் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அட்டைப் படத்தைப் பற்றி எவரும் பேசுவதில்லை.

அட்டைப் படத்தில் போட்டது உண்மையா? செருப்பால் அடித்தார்கள் என்பது இராமனை செருப்பால் அல்லது செருப்புகளால் அடித்தார்கள் என்பது எல்லாம் இருக்கட்டும். ஆனால் ஏன் அடித்தார்கள்? என்பதற்கு நாம் பல விளக்கங்களை கூறுகிறோம். 5000 பேர் போகிற ஊர்வலத்தில் 50 பேர் நின்று எதிர்ப்பு தெரிவிக்கும் போராட்டத்திற்கு அனுமதியளிக்கிறார்கள். காவல்துறையினர் இடையில் மூன்று வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். அங்கிருந்து ஒரு செருப்பை வீசுகிறார்கள், அதாவது 5000 பேர் என்றால் நூறு நபர்கள் இருக்கும் இடத்தில் ஒருவர் செருப்பை வீசுவது போலத் தான் அதற்கு எப்படி எதிர்வினை வரும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எது தவறு? நூறு பேர் இருக்கும் இடத்தில் ஒருவர் செருப்பை வீசியது தவறா? அதற்கு எதிர்வினையாகப் படத்தை செருப்பால் அடித்தது தவறா? முதல் வினையைப் பற்றி யாரும் பேசுவதேயில்லை. ஜனநாயகமாக அனுமதியளிக்கப்பட்ட ஊர்வலத்தில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் ஜனநாயகமாக அனுமதியளித்ததை தவறாக பயன்படுத்தியதைப் பற்றி யாரும் பேசுவதில்லை. ஆனால் அதில் வீசிய செருப்பை எடுத்து அடித்ததை மட்டும் தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே என்ன நோக்கத்துடன் இவை பரப்பப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது அந்த படங்களை அச்சிட்டு மீண்டும் 21.1.2020இல் 'துக்ளக்' வந்துள்ளது. அதில் மீண்டும் அந்த படத்தை அச்சிட்டுள்ளார்கள். இராமர் மட்டும் தான் அதில் உள்ளார் சீதை இல்லை. நிர்வாணமாக எங்கேயும் இல்லை. நேர்மையானவர்களாக இருந்தால் எழுதியிருக்க வேண்டும். ரஜினிகாந்த் தவறுதலாக கூறிவிட்டார். இராமன் சீதை படத்தை நிர்வாணமாக எடுத்து வரவில்லை என்று எழுதி சமாளித்திருக்கலாம். அந்த படத்தில் சீதை இல்லை, இராமரும் உடையோடுதான் இருக்கிறார்.

மற்றொரு செய்தி, இப்போதெல்லாம் இந்து கடவுள்களை மட்டும் விமர்சிக்கிறீர்கள் என்று நம்மைப் பார்த்து கேட்பார்களல்லவா! துக்ளக்கில் எழுதுகிறார்கள், இந்த திராவிட கூட்டம் இந்துக் கடவுள்களை மட்டும் அவமதிக்கவில்லை, முஸ்லிம்களின் 786 என்ற எண்ணை அல்லாவின் அலைபேசி எண்ணா என்றெல்லாம் கேட்டவர்கள், கன்னிமேரி எப்படி கர்ப்பம் ஆனார் என்று தெருக்களில் எழுதினார்கள். இப்படி கிருத்துவர்களையும், முஸ்லிம்களையும் அவமானப்படுத்திய கூட்டம் அது என்று எழுதியுள்ளனர் துக்ளக்கில். இப்படி எழுதிவிட்டு மற்றொரு பக்கத்தில் ஒரு கேள்வி பதிலையும் எழுதியுள்ளனர், கடவுள் மறுப்பு பேசுகிறவர்களும், அய்யப்ப சாமி பக்தர்களும் கறுப்பு உடை அணிகிறார்களே. இவர்களிடையே நிலவும் ஒற்றுமை வேற்றுமை என்ன? என்று ஒரு கேள்வி. அதற்கு 'துக்ளக்' தரும் பதில், 'கறுப்பு உடை போடும் பெரியார் பக்தர்கள் இந்து மதக் கடவுள்களை மட்டும் கேவலப்படுத்துவார்கள்' என்று எழுதுகிறார். அதாவது ஒரு பக்கம் இந்துக்களை மட்டுமல்ல, மற்ற இரண்டு மதத்தினரையும் கேவலப்படுத்தினார்கள் என்று எழுதிவிட்டு, வேறொரு பக்கத்தில் இந்துக்களை மட்டும் எதிர்ப்பார்கள் என்று எழுதியுள்ளனர். அண்ணா சொல்வாரே 'பேராசை பெருந்தகையேப் போற்றி, பேச நா இரண்டுடையாய் போற்றி' ஒரே இதழில் இரண்டு விசயங்களையும் முரண்பாடாக எழுதுகிறார்கள்.

ரஜினிகாந்த் சோவைப் பற்றி பேசினார், பெரியாரைப் பற்றி பேசினார், இராமன் நிர்வாணமாக இருந்ததாக கூறினார்; இதற்கெல்லாம் ஆதாரமாக 2017ஆம் ஆண்டு 'அவுட்லுக்' பத்திரிக்கையைக் காட்டினார். அந்த கட்டுரையை ஜி.சி. ஷேகர் என்பவர் எழுதியிருந்தார். ராமன், சீதை உருவங்கள் செருப்பு மாலை போடப்பட்டு நிர்வாணமாக எடுத்து வரப்பட்டன என்று எழுதியுள்ளார். இதைத் தான் ரஜினிகாந்த் ஆதாரமாக காட்டினார். அதைப் பற்றிய கட்டுரையை மீண்டும் எழுதியது ஜி.சி. ஷேகர். அவுட்லுக்கில் 27.01.2020இல் வந்துள்ளது. தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் நானும் அவரும் கலந்து கொண்ட போது உடை இல்லாமல் எடுத்து வரப்பட்டது என்று பேசினார். இப்போது செருப்பு மாலை என்ற வார்த்தையை மட்டும் எழுதிவிட்டு 'In nude' என்ற வார்த்தையை விட்டுவிட்டார். இவர் முன்பு எழுதிய கட்டுரையைத் தான் ரஜினி ஆதாரமாகக் காட்டினார். பிரச்சனை வந்த பின்பு அதே நபர் Nude (உடையில்லாமல்) என்ற வார்த்தையை விட்டுவிட்டு எழுதினார். ஆனால் தொலைக்காட்சி விவாதத்தில் உடையில்லாமல் தான் எடுத்து வரப்பட்டது என்று வாதாடுபவராகவும் இருந்தார். இப்படித்தான் இந்துத்துவவாதிகள் பித்தலாட்டக்காரர்களாக இருக்கிறார்கள் என்றார் கொளத்தூர் மணி. ●

### திரைமறைவில் நடக்கும் இரகசிய பேரங்கள்

# இராஜபக்சேவை இந்தியா அழைத்தது ஏன்?

## சென்னை ஆர்ப்பாட்டத்தில் விடுதலை இராசேந்திரன் விளக்கம்

*இராஜபக்சேவின் இந்திய வருகையைக் கண்டித்து ‘ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு’ சார்பாக, சென்னை, வள்ளுவர் கோட்டம் முன்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை அதில் பங்கேற்றுள்ள அமைப்புகள் நடத்தியுள்ளன. ஆர்ப்பாட்டத்தில் பெருமளவு பங்கேற்ற திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இன்றைய தினம் ஈழத் தமிழர்களின் உரிமைகளைக் காவு கொடுத்து, பா.ஜ.க.வின் நரேந்திர மோடி அரசும்–சிங்கள இன வெறி அரசின் பிரதமரான இராஜ பக்சேவும் இணைந்து நடத்திடும் ஈழத் தமிழரின் தேசிய இன அடையாளமழித்து, அங்கு ஒற்றை ஆட்சி முறையை, ஆழ வேரூன்றச் செய்வதற்காக மேற் கொள்ளும் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தி உரை யாற்றினார். அவரது உரையில் குறிப்பிட்டதாவது :*

இலங்கைப் பிரதமர் மஹிந்த இராஜபக்சே 5 நாள் அரசு முறைப் பயணமாக 07.02.2020 அன்று புது டெல்லிக்கு வருகை தந்திருக்கிறார். இவரை விமான நிலையம் சென்று வரவேற்றிருக்கிறார், இந்திய மனிதவள மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் சஞ்சய் தோட்ரே.

“இராஜபக்சே புதுடெல்லிக்கு வருகை தந்திருக்கிறார். ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பற்றியோ, ஏற்கனவே ‘காணாமல் போனவர்கள்’ இறந்து விட்டார்கள் என்று திமிரோடு அறிவித்துள்ள அதிபர் கோத்தபயாவின் அறிவிப்பு - மாபெரும் இனப்படுகொலை அல்லவா என கேட்பதற்கோ, ஈழத்தமிழர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்குவதற்கான இராஜீவ் காந்தியால் இலங்கை அரசுடன் போடப்பட்ட 13ஆவது அரசமைப்புச் சட்ட அமலாக்கம் பற்றியோ, தமிழர் பகுதிகளில் இருந்து முற்றாக இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என வலியுறுத்துவதற்காகவோ இராஜ பக்சேவை, இந்தியா அழைக்கவில்லை. இந்த அழைப்பிற்குப் பின்னால்,வேறுபல அரசியல் காரணிகள் இருப்பதாக ஆங்கில நாளேடுகள் செய்திகளை விரிவாக வெளியிட்டுள்ளன. இலங்கை அரசு, திருப்பிச் செலுத்த முடியாத அளவிற்கு சீனாவின் கடன் வலையில் சிக்கி மீள முடியாது உள்ளது. எனவே, இந்தியா, இலங்கைக்குப் புதிய உதவிகளைச் செய்வதற்கான அறிவிப்புகளை வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே, அதிபர் கோத்தபயா வந்தபோது இந்தியா, இலங்கைக்கு 450 மில் லியன் டாலர்களை நிதியாக அளித்தது. அதிலே, 50 மில்லியன் டாலர்களை இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகத் தருவதாக அறிவித்தது இந்தியா. ஏற்கனவே,பயங்கரவாத நாடாக ஈழத் தமிழர்களைக் கொன்றழித்துள்ள இலங்கைக்கு, பயங்கரவாத ஒழிப்புக்கு தனி நிதி தருவது எஞ்சியுள்ள தமிழர்களையும் கொன்று குவிப்பதற்கா? கடந்த முறை இராஜ பக்சே அதிபராக இருந்தபோது, சீனாவுடன் நெருக்கமான உறவு கொண்டு, சீனா ஏராளமான முதலீடுகளை இலங்கையில் செய்வதற்கும், அம்பன் தோட்டா துறைமுகம், சாலை வசதிகள் என பல பில்லியன்களை முதலீடு செய்வதற்கும் துணை போய், அந்நாட்டோடு மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தார். இந்தப் பிணைப்பால் எரிச்சலுற்ற இந்தியா, இலங்கையைத் தன் பக்கம் இழுக்கவும், இராஜபக்சேவை ஆட்சியை விட்டு அகற்றவும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. இதனால், எதிர்க் கட்சிகளாக இருந்த சிறீசேனா-இரணில் விக்கிரம சிங்கே இடையே கூட்டணியை ஏற்படுத்தி, ராஜபக்சேவை வீழ்த்துவதற்கு இந்தியா,தனது இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனை அறிந்த ராஜ பக்சே, ‘இந்தியா தனக்கு எதிராகச் சதி செய்வதாகவும், இந்திய உளவு அமைப்பான ‘ரா’ (Research and Analays Wing)வின் உயரதிகாரியாக இலங்கையில் பணியிலிருந்த இளங்கோ உடனடியாக வெளியேறிட வேண்டும்’ எனவும் உத்திரவிட்டார். இவ்வாறு வெளியேற்றப்பட்டு, டில்லி திரும்பிய அதிகாரிக்கு அதைவிட உயர் பதவி அளித்தது பாஜக அரசு. தேர்தலில் ராஜபக்சே தோல்வியடைந்து சிறீசேனா-ரணில் கூட்டணி ஆட்சி அமைத்தும், அது நிலையான ஆட்சியாக தொடர முடியவில்லை.

இந்தச் சூழலில், சிறீசேனா தலைமையிலான ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும், கோத்தபயா அதிபர் ஆவதற்குமாகவே, இலங்கையில் கிறித்துவ தேவாலயங்கள் மீது இஸ்லாமியத் தீவிரவாதத் தாக்குதல் கள் நடத்தப்பட்டதாக ‘Frontline’ ஏடானது முக்கியச் செய்தியினை வெளியிட்டது. இந்த வெடிகுண்டுத் தாக்குதல் பற்றி விசாரணை நடத்திய இலங்கை நாடாளுமன்றத் தேர்வுக் குழு வெளியிட்ட அறிக்கையில் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவந்தன. குண்டு வெடிப்புச் சதி வேறு எந்த வெளிநாட்டிலிருந்தும் தீட்டப்பட வில்லை; அது உள்நாட்டிலேயே தீட்டப்பட்ட சதி என்றும், இலங்கைப் புலனாய்வு அமைப்புகளுக்கு இதுபற்றிதகவல் தெரிய வந்தும் அதனைத் தடுக்க முன்வரவில்லை என்றும், இது குறித்து இந்திய அரசு முன்கூட்டியே எச்சரித்தும், அது கண்டு கொள்ளப் படவில்லை என்றும், இந்த குண்டுவெடிப்பு சதியின் முக்கிய நோக்கமே மீண்டும் இராஜபக்சே சகோதரர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதே என்றும் இலங்கை நாடாளுமன்றத் தேர்வுக் குழு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

குழுவின் அறிக்கை மேலும் இவ்வாறு கூறியது: “கிறிஸ்தவர்கள் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சு குறித்து புலனாய்வுத் துறையிலுள்ள ஒரு பிரிவு முன்கூட்டியே தகவல் தெரிந்த நிலையிலும் ஏன் அலட்சியம் காட்டியது என்பதை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், எந்த இஸ்லாமிய அரசுகளும் இந்த குண்டு வெடிப்பை நடத்தவில்லை. இது இலங்கையிலே உருவான உள்நாட்டு சதி என்றும் அறிக்கை கூறியது. கிறிஸ்தவர்கள்மீது நடந்த குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து, பாதுகாப்புத் துறை செயலாளராக ஹேம சிறீபெர்னாண்டோ என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் நடத்திய தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்தில் குண்டு வெடிப்புக்கு பொறுப்பு ஏற்பதாக அறிவித்த ‘தேசிய தவ்ஹீத் ஜமாத்’ என்ற அமைப்பு குறித்தோ அதன் செயல்பாடுகள் குறித்தோ எந்த விவாதமும் நடந்து விடாமல் தவிர்க்கப்பட்டதோடு, தொடர்பில்லாத வேறு பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் தந்து விவாதிக்கப்பட்டன. சதி உள் நாட்டிலேயே உருவானது என்பதை மறைப்பதற்கான முயற்சியா என்பது குறித்து விசாரிக்க வேண்டும்” என்று நாடாளுமன்றக் குழு அறிக்கை (அக். 30, 2018இல் வெளியானது) கூறுகிறது. இத் தகவல்களை யெல்லாம் ‘பிரண்ட் லைன்’ ஆங்கில ஏடு ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி இரண்டு கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறது. (2019, ஜுலை 15 மற்றும் 2019 நவம்பர் 22, இதழ்கள்.

மக்களை பாதுகாக்கத் தவறிய சிறீசேனா அரசு என்று செய்யப்பட்ட பிரச்சாரத்தால், திட்டமிட்டபடி, கோத்தபயா-இராஜபக்சே சகோதரர்கள் இலங்கை ஆட்சியைக் கைப்பற்றிவிட்டனர் இந்தச் சூழ்நிலையில் தான், இலங்கை அதிபராகிய கோத்தபயா கடந்த நவம்பர் மாதமும், இப்போது ராஜபக்சேவும் இந்தியாவிற்கு வருகை தந்துள்ளனர்.

இடையே இலங்கை வெளிவிவகார அமைச்சரும் டெல்லிக்கு வந்து மோடியைச் சந்தித்துச் சென்றுள்ளார். இதனூடாக, இந்திய வெளிவிவகார அமைச்சர், பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் கொழும்பு சென்று திரும்பினர். இந்தப் பின்னணியில், ராஜபக்சேவின் 5 நாள் வருகையில், இந்தியப் பெருங்கடலில் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற வகையில், இந்தியா, இலங்கை, மாலத்தீவு நாடுகளுக்கு இடையே கப்பல் படை கண்காணிப்பு ஒப்பந்தம் ஒன்று உருவாகிக் கொண்டிருப்பதாகவே ஆங்கில ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன. எனவே, சீனாவின் கடன் வலை, முதலீட்டு வளையங்களில் இருந்து இலங்கையை மீட்டு, தன் பக்கம் இழுக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும், இந்திய பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் உடன்பாடு ஒன்றை உருவாக்கவும் இந்தியா செயல்படுகிறதே தவிர, ஈழத்தமிழர்களின் நலன் மீது எந்த அக்கறையும் மோடி அரசுக்கு இல்லை.

மோடியை சந்தித்தப் பிறகு இராஜபக்சே அளித்த பேட்டியில் - இருநாடுகளுக்கிடையே வர்த்தக இராணுவ உறவுகளை வலிமைப்படுத்துவது குறித்தே பேசினோம் என்று கூறியதோடு, ஈழத் தமிழர்களுக்கு 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் உரிமைகள் வழங்குவதை பெரும்பான்மை சிங்களர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று வெளிப்படையாகவே பேட்டி அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. பிரதமர் மோடி ஈழத் தமிழர் உரிமைகள் பற்றி விவாதித்ததாக மோடி தரப்பில் வெளியான அறிக்கை - தமிழர்களை ஏமாற்றும் கண்துடைப்பு என்பதை ராஜபக்சேவே அம்பலப்படுத்தி விட்டது குறிப்பிடத்தக்கது.

இலங்கை தேசிய கீதத்தில் தமிழில் இசைக்கப்பட்டது நீக்கப்பட்டு உள்ளது. மாவீரர் நாளுக்கு தம் பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்தத் செல்லும் மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள், யாழ். பல்கலை மாணவர்கள் மிரட்டப்படுகிறார்கள். சிங்கள அரசு, தமிழர் அடையாளங்களை இல்லாதொழித்து, அங்கு ஒற்றை இன ஓர்மையைத் தமிழர்கள் மீது இராணுவத்தைக் கொண்டு திணித்து வருகிறது. இதே பாணியில், இந்தியாவிலும், மோடியின் காவி ஆட்சி, மாநில உரிமைகளைப் பறித்து, தேசிய இனங்களின் அடையாளங்களைச் சிதைத்து ‘இந்திய’ ஓர்மையை திணித்திடத் துடிக்கிறது. இந்தப் பின்னணியில் தான், இலங்கை அரசினைக் குளிரவைத்திட, ஈழத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை இல்லை என்று மோடி அரசு அறிவித்திருக்கிறது.

மொத்தத்தில், தங்களது புவிசார்-பூகோள நலன்களுக்காக இந்திய-இலங்கை அரசுகள் ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைகளை காவு கொடுத்துள்ளன. எனவே, உலகத் தமிழ்ச் சமுதாயம், இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும், தமிழர்களிடையே வாக்கெடுப்பு நடத்தி தேசிய சுய நிர்ணய உரிமையைப் பெற வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை மட்டும் முன்வைத்து சர்வதேச அரங்குகளில் போராடிட முன் வரவேண்டும் என உரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், திராவிடர் விடுதலைக் கழகம், இளந் தமிழகம், மே-17 உள்ளிட்ட அமைப்புகளின் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## பெரியார் சிலை உடைப்பு எதிரொலி: பேராவூரணியில் ஆர்ப்பாட்டம்!

காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் அருகே கலிப்பட்டு கிராமத்தில் சமூக விரோதிகளால் பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செயலை கண்டித்து பேராவூரணியில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பேராவூரணி பெரியார் சிலை அருகில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், திராவிட முன்னேற்ற கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, தமிழக மக்கள் புரட்சி கழகம், அறநெறி மக்கள் கட்சி, விதை நெல் இலக்கிய கூடம் உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பெரியார் சிலையை உடைத்தவர்கள் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

கூட்டத்தில் உண்மைக்கு மாறாக பெரியாரை அவதூறு செய்யும் நோக்கத்தோடு ‘துக்ளக்’ இதழ் விழாவில் பேசிய ரஜினிகாந்துக்கு எதிராகவும், கலவரத்தை தூண்டும் வகையில் கருத்து தெரிவித்த தமிழ்நாடு அமைச்சர் ராஜேந்திர பாலாஜிக்கு எதிராகவும் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பெரியார் சிலைகளை சேதப்படுத்தும் பயங்கரவாத சக்திகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு நாடு தழுவிய அளவில் பெரும் போராட்டங்களை கட்டமைக்கும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் அறிவிக்கப்பட்டது. நிகழ்வுக்கு பெரியார் பெருந்தொண்டர் ஐயா அரு. நல்லதம்பி தலைமை வகித்தார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகப் பேச்சாளர் அப்துல் மஜீத், தமிழக மக்கள் புரட்சி கழகப் பொறுப்பாளர் ஆறு. நீலகண்டன், திராவிடர் கழக பொறுப்பாளர்கள் நீலகண்டன், வை.சிதம்பரம், திராவிடர் விடுதலைக் கழகப் பொறுப்பாளர்கள் சித.திருவேங்கடம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பாளர் வ.ராஜமாணிக்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்பாளர் ஆர்எஸ் வேலுச்சாமி, காங்கிரஸ் கட்சி பொறுப்பாளர் சேக் இப்ராம்ஷா, அறநெறி மக்கள் கட்சி பொறுப்பாளர் ஆயர் ஜேம்ஸ், மெய்ச்சுடர் நா வெங்கடேசன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கும்பகோணத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்




16.2.2020 ஞாயிற்றுக் கிழமை மாலை ஆறு மணி அளவில் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் மீன் மார்க்கெட் அருகில் மக்கள் அரசு கட்சி பொதுச் செயலாளர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற அக் கட்சியின், குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான கண்டனக் கூட்டத்தில் பல்வேறு அரசியல் இயக்கங்கள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகள் இணைந்து பெருவாரியான மக்கள் கலந்து கொண்டனர். அதில் அழைக்கப்பட்டிருந்த அனைத்துக் கட்சித் பொறுப்பாளர்களும் உரையாற்றினார்கள். மக்கள் அரசு கட்சியின் தலைவர் வழக்கறிஞர் அருள்மொழிவர்மன் சிறப்புரை ஆற்றினார்.

அக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்த திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை சுட்டிக்காட்டி அக்கூட்டத்தின் நோக்கத்தையும், மக்கள் இந்த நேரத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டியதின் மிக முக்கியமான தேவையையும் வலியுறுத்தி நல்லதொரு கண்டன உரையாற்றினார்கள். கூட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் நாச்சியார்கோயில் கிளையின் சார்பாக மூன்றாவது தவணையாக கழகக் கட்டமைப்பு நிதிக்காக ரூ.20,000/- கழகத் தலைவரிடம் வழங்கப்பட்டது.

இரவு 10.35 வரை நடந்த கூட்டத்தில் மக்கள் திரள் கலையாமல் இருந்து செய்திகளை செவிமடுத்தது என்பது சிறப்பு / இறுதியாக மக்கள் அரசு கட்சியின் குடந்தை ஒன்றிய செயலாளர் பாரதி நன்றியுரையாற்றினார்.

# ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டம் நடத்திய அண்ணா நினைவு கருத்தரங்கு





நிமிர்வோம் 13 ஆவது வாசகர் வட்ட நிகழ்வு. பேரறிஞர் அண்ணாவின் 51 ஆவது நினைவு நாளை முன்னிட்டு அண்ணா நினைவு தின சிறப்பு வாசகர் வட்டமாக திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவலகத்தில் 16.02.2020 அன்று மாலை 6:30 மணியளவில் நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கத்தில் ஊடகவியிலாளர் பிரகாஷ் வரவேற்புரையாற்றினார். தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் சு.பிரகாஷ் தலைமை வகித்தார். அண்ணாவின் இரங்கலுக்காக கலைஞர் எழுதிய கவிதையின் சிறு பகுதியை, ‘இதயத்தை தந்திடண்ணா’ என்ற தலைப்பில் யாழினி வாசித்தார்.


நிகழ்வில் 30.12.2019 அன்று வேலூர் கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை, ‘இந்திய நாட்டினருக்கும் எதிரானது தான் குடியுரிமை திருத்தச் சட்டம்’ என்கிற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. இதனை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட, பேராசிரியர் மு.நாகநாதன் பெற்றுக் கொண்டார்.

கடந்த வாசகர் வட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரை, ‘குடியுரிமை சட்டங்களை ஏன் எதிர்க்கிறோம்’ என்கிற தலைப்பில் வெளியீடாக வெளிவந்துள்ளது. நூலை பெரியார் யுவராஜ் வெளியிட பேராசிரியர் மு.நாகநாதன் பெற்றுக்கொண்டார். இவ்விரு நூலையும் கழகத்தின் இணையதள பொறுப்பாளர் விஜயகுமார் முயற்சி எடுத்து வெளியிட்டுள்ளார்.

‘அண்ணாவின் முற்போக்கு அரசியல்’ என்ற தலைப்பில் ஜெயபிரகாஷ் உரையாற்றினார். நிறைவாக அண்ணாவின் படத்தை திறந்து வைத்து அண்ணாவின் மாநில சுயாட்சி பற்றி பேசிய பேராசிரியர் மு. நாகநாதன் (மாநில முன்னாள் திட்டக்குழு துணைத் தலைவர்), அண்ணா-பெரியார் என்ற இரு தலைவர்களுக் கிடையிலான அழுத்தமான கொள்கைப் பிணைப்பு - உறவுகளை விரிவாக பகிர்ந்து கொண்டார். இந்தியா என்ற துணைக்கண்டம் கூட்டாட்சி தத்துவத்துடன் செயல்பட வேண்டும் என்று தனது உரையை முடித்தார். இறுதியாக மயிலாப்பூர் ஜா.உமாபதி நன்றி கூறினார்.

# ‘நிமிர்வோம்’ – புதிய வெளியீடுகள் விற்பனைக்குத் தயார்!





- இந்திய நாட்டினருக்கும் எதிரானது தான் குடியுரிமைத் திருத்தச் சட்டம் - கொளத்தூர் மணி
- குடியுரிமைச் சட்டங்களைஏன் எதிர்க்கிறோம்? - விடுதலை இராசேந்திரன்

ஒவ்வொன்றின் விலை ரூ.15/- மட்டுமே

தொடர்புக்கு:
விஜயகுமார், இணையதள பொறுப்பாளர்
9841653200

# வெளிவந்து விட்டது

## ‘நிமிர்வோம்’ – பிப்ரவரி 2020 இதழ்




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745 / 7299230363 / 7373684049
www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 20th February 2020

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர் & மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN